# 20 நாட்டார் தெய்வங்கள்

## அ. திரௌபதியம்மன் சடங்கு

உலகின் எல்லாப் பகுதிகளிலும் நாகரிகத்தின் உச்சியில் வாழ்பவர்களிடையிலும், நாகரிகத்தின் கீழ்ப்படியில் உள்ளவர்களிடத்திலும் சடங்குகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை சடங்குகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. ஒரே சாதி, குலம், இனம் சார்ந்த மக்கள் ஒரே வகையான சடங்குகளைச் செய்வார்கள். சடங்கைச் செய்யாவிட்டால் தமது காரியங்கள் இனிதே நிறைவேறாது என்ற நிலையில் இச் சடங்குகளைச் செய்கின்றார்கள். உண்மையில் சடங்குகள் மக்களை இணைத்து வைப்பன என்றே கூறலாம். இச்சடங்குகள் வேறு குழுக்களிடம் இருந்து வேறுபடுத்தவும் உதவுகின்றன. பழந்தமிழர் நூல்களிலும், வேதங்களின் பகுதிகளிலும் இச் சடங்குகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. வாழ்க்கையுடன் இணைத்து சடங்குகள் என்ற வகையில் சமய சடங்குகள், பிறப்பு சம்பந்தமான சடங்குகள், திருமணச் சடங்குகள், வேளாண்மைச் சடங்குகள், ஈமச்சடங்குகள், பிற சடங்குகள் எனச் சடங்குகள் பல தரப்பட்டனவாகும். இவற்றுள் சமயச் சடங்கு பற்றியும், அச்சடங்கில் திரௌபதி அம்மன் சடங்கின் முக்கியம் பற்றியும் படிப்போம்.




ஒவ்வொரு சமயியும் நாள்தோறும் மூன்று நேரங்களிலும் பல சடங்குகளைச் செய்ய இந்து மதம் வழிவகுக்கின்றது. சமயம் தோன்றிய பின் அதனுடன் இணைந்து சில சடங்குகள் காணப்பட்டன. அச்சடங்குகள் மந்திரச் சமயச் சடங்குகள் எனப்பட்டன. நாட்டார் தெய்வ வழிபாடுகளுள் இச்சமயச் சடங்குகள் காணப்படுகின்றன. மேல் நிலையாக்கம் பெற்ற கோயில்களில் நிகழும் சடங்குகள் மந்திரத்தன்மை குறைந்த சமயச் சடங்குகளாகும். இங்கே பூசகர் சடங்குகளை நடத்துபவராகவும், பக்தர்கள் பார்வையாளர்களாகவும் இருப்பர். ஆனால் நாட்டார் தெய்வ வழிபாட்டில் மக்களின் நேரடியான பங்களிப்பினைக் காணலாம். நாட்டார் தெய்வ வழிபாட்டின் போது பண்டம் எடுத்தல், மடைபரவுதல், தூளிபிடித்தல், கதவு திறத்தல், சந்தனக் காப்பிடல், பலியிடுதல், கலையாடுதல், சூனியம் வெட்டுதல்,



பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம்

கச்சுநேருதல், உருவம் நேர்ந்து விடுதல், குழந்தைப் பேறற்ற பெண்கள் சிறு மரத் தொட்டில்களைச் செய்து நேர்த்திக்கடனாகத் தருதல், தீப்பந்தம் ஏற்றுதல், சொற் பொழிவு போன்றன நிகழ்ந்தேறும். இச்சடங்குகள் நாட்டார் தெய்வ வழிபாட்டுடன் இணைந்தன. இச்சடங்குகள் சிலவற்றோடு வேறு புதிய சடங்குகள் காணப்படுவது திரௌபதியம்மன் சடங்கிலேயாகும்.

ஈழத்தில் கிராமியப் பெண் தெய்வங்கள் சடங்கை அடிப்படையாகக் கொண்டு வழிபடப்படுகின்றன. அவற்றுள் காளி, மாரி, பேச்சி, வாராகி, பிடாரி, கொத்தி, சன்னாசி, கண்ணகி, நாச்சிமார், சீதை, திரௌபதி என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் திரௌபதி அம்மன் வழிபாடு தமிழகத்திலிருந்து வந்த தமிழ் மக்களால் கொண்டுவரப்பட்ட வழிபாடாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. ஏனெனில் திரௌபதி அம்மன் வழிபாடு பல்லவர் காலத்தில் திரௌபதிக்கு ரதக் கோயில் எடுத்து வழிபட்டதிலிருந்தும் விஜய நகர நாயக்கர் காலத்திலும் இவ்வழிபாடும் இதனோடு இணைந்த காளியாட்டமும் காணப்பட்டமையாகும். ஈழத்தில் காணப்படும் திரௌபதி அம்மன் ஆலயங்கள் என்ற வகையில் மட்டக்களப்பு பிரதேசத்திலே தான் கூடுதலாகக் காணப்படுகின்றன. அவ்வாறான ஆலயங்களுள், பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயம், ஆரையம்பதி திரௌபதியம்மன் ஆலயம், பழுகாமம் திரௌபதியம்மன் ஆலயம், புதூர் திரௌபதியம்மன் ஆலயம், புளியந்தீவு திரௌபதியம்மன் ஆலயம் மட்டக்குழி திரௌபதியம்மன் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றை விட புத்தளம் மாவட்டத்தின் உடப்பு என்ற கிராமத்திலுள்ள திரௌபதியம்மன் ஆலயமும் சிறந்த ஆலயமாகக் கருதப்படுகின்றது. இவ்வாறான திரௌபதியம்மன் ஆலயங்களின் சடங்கை ஆற்றுப்படுத்துவோர் பூசாரி என்றே அழைக்கப்படுவார். ஆனால் பழுகாமம் திரௌபதி அம்மனை ஆற்றுப்படுத்துவோர் நம்பியார் என்றே அழைக்கப்படுவார்.


உடப்பு திரௌபதை அம்மன் ஆலயம்

ஈழத்தின் திரௌபதி அம்மன் வழிபாட்டில் பல்வேறு சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வழிபாடு மகாபாரதக் கதையுடன் தொடர்பு பட்டது. வைணவ நெறியைப் பரப்பும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட வழிபாடாகும். மகாபாரத பதினெட்டுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டே திரௌபதியம்மன் சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆதலால் பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலய வரலாறு பற்றியும் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சடங்குகள் பற்றியும் விரிவாகக் கற்போம்.

பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயமானது வட இந்தியாவின் கொங்கு நாட்டில் இருந்து வந்த தாதன் என்பவனால் கட்டப்பட்டது. இந்த

ஆலயம் சிங்கள பௌத்த மன்னன் விமலதர்மசூரியன் புனரமைப்புச் செய்தான் என்றும் பத்ததிகள் என்ற பத்தாசிகள் தெரிவிக்கின்றன. (பத்ததிகள் என்பது சிறு தெய்வ வழிபாட்டைக் கூறும் நூற்தொகுதி) பாமர மக்களும் மகாபாரதக் கதையை அறிந்து கொள்ளும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயம் காலப்போக்கில் அதனை நிறைவேற்றியது பாடல்களும், கூத்துக்கலை மரபும் இப்பிரதேசத்தின் பெருவழக்குப்பெற்றது. இந்த வழிபாட்டின் சிறப்புப்பற்றி தாதன் கல்வெட்டுக் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆவினங்கற் வாழ அறமுயர்ந்து சாலி எழ**
**பாவலர் பாடப் பல்லுயிரெல்லாம் வாழ்க**
**மாதத்தில் மூன்று மழை மட்டுநகர் பெய்து வா''**

என்று இக்கல்வெட்டுக் கூறுவதால் திரௌபதியம்மன் வழிபாட்டின் சிறப்பை உணர்ந்து கொள்ளலாம். நோய்களைப் போக்கவும், பிள்ளைப்பேறு வேண்டியும், வேளாண்மை பெருகவும், பட்டி பெருகவும் இவ்வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாலய வழிபாட்டுச் சடங்குகள் பூசாரியினால் ஆற்றுப்படுத்தப்படுகின்றன. ஏனைய சடங்குகளிலிருந்து வேறுபட்டது நாடகத் தன்மை வாய்ந்தது. திரௌபதி பாண்டவர் விக்கிரகங்கள் கொலுவைத்து வழிபடுவது. இங்கு வேண்டல் எனப்படும் வந்தனை வழிபாடே நடைபெறுகின்றது. பதினெட்டுத்தினங்கள் நடைபெறும் இந்த வழிபாட்டில் பெரும்பாலான சடங்குகள் பாண்டவர் வேடம் தரித்து நிற்கும் ஐவர் கொலுவினருக்கே நடைபெறுகின்றன. மனிதனும் தெய்வமாகலாம் என்பதற்கேற்ப மனிதனை தெய்வமாக வழிபடும் மரபு காணப்படுகின்றது.



**பாண்டவர் வனவாசம்**

இந்தத் திரௌபதி ஆலயப் பிரதான சடங்குகளாக திருக்கதவு திறத்தல், கொடியேற்றம், சுவாமி எழுந்தருளப்பண்ணல், கலியாணக் கல்வெட்டுதல், பாண்டவர்கள் வனவாசம் செல்லல், அருச்சுனன் தவருலைத்தொடர்ந்து நள்ளிரவு பண்டிமறித்தல்,கமலக்கன்னி, அருச்சுனன்தலம், அரவான் கறப்பலி, (அருச்சுனனின் மகன் தீக்குறிப்பு (தீப்பள்ளம்) என்பன இடம்பெறும் ஈழத்தில் அதிகூடிய நீள அகலங்களைக் கொண்ட தீக்குறி இதுவாகும். பதினெட்டு தினங்கள் பக்குவமாய் விரதம் இருந்து பாண்டவர்களுடன் தேவாதிகள் தீயில் இறங்குகின்ற காட்சி கண்கொள்ளா காட்சியாகும். பெண் தீமிதிப்பில் ஈடுபடுவதில்லை. ஆண்களே தீக்குளிக்கிறார்கள் ஆலயத்திற்கு வந்து நின்று தங்கி இங்கே நடைபெறுகின்ற சடங்கு

வழிபாடுகளில் கொலுவில் நின்று பக்குவமாய் விரதம் இருந்து அனுட்டிப்பவர்கள் மட்டுமே தீயில் இறங்க முடியும்.



தீ மிதிப்பு

தீமிதிப்பு நடந்து மறுநாள் தீக்குளிக்கு பால் வார்த்தல் சடங்காக நடைபெறும் போது தெய்வம் ஆடுவோரும் காணப்படுவர். தெய்வமாடுவோர் தம்மை மறந்து ஆடாது பாரம்பரிய நாடகபாணியில் ஆடுவது சிறப்புக்குரியதாகும். இந்தத் தெய்வமாடுதல், உடுக்கடித்தல், சிலம்பொலி, பறையடித்தல் மற்றும் மந்திரங்கள் மூலம் பூசாரியால் மேற்கொள்ளப்படுகின்றன. தெய்வமாடுபவர் ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு அருள்வாக்குச் சொல்லுதல், காப்புக்கட்டுதல் போன்றவைகளும் இடம் பெறும். இவ்வாறான சடங்குகள் யாவும் ஆண்டுதோறும் ஆடிமாதம் இந்த ஆலயத்தில் இடம்பெறுகின்றது. இவ்வாறு ஈழத்தின் முதல் திரௌபதி அம்மன் ஆலயமாக பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயச் சடங்குகள் கொடி இறக்கத்துடன் நிறைவேறும்.

## ஆ. வைரவர் வழிபாடு



சிவ மூர்த்தங்கள் அறுபத்து நான்கு ஆகும். அவற்றுள் இருபத்து ஐந்து சிவமூர்த்தங்கள் முக்கியமானதாகும். இருபத்து ஐந்து சிவ மூர்த்தங்களுள் வைரவர் மூர்த்தமும் ஒன்றாகும். வைரவர் மூர்த்தம் தோன்றிய வரலாறு பற்றி ஆகமங்களும் புராணங்களும் எடுத்துக் கூறியுள்ளன. வடுகவைரவர், காலவைரவர், மகாவைரவர், உக்கிரவைரவர், சுவர்ணக வைரவர், நரசிம்ம வைரவர், ஞானவைரவர் என வைரவர் மூர்த்தங்களை இலக்கியங்கள் வகைப்படுத்தியுள்ளன. இவற்றுள் ஞான வைரவர் மூர்த்தமே எல்லா ஆலயத்திலும் காணப்படுகின்றது.

பிரமனின் ஆணவத்தை அடக்கும் பொருட்டு சிவனின் அம்சமாகத் தோன்றியவர், பிரமனின் ஐந்தாவது தலையைத் தன் நகத்தால் கொய்யப்பட்ட தலை விரலை விட்டு அகலாததால் காசிக்குச் சென்று அருள் பெற்று ஒட்டிய தலையை விரலிருந்து அகற்றியவர். காசியிலே காவல் தெய்வமாக எழுந்தருளியவர். அகோரவடிவத்தவர். பல்வேறு ஆயுதங்களை ஏந்தியவர். நிர்வாண கோலத்தவர். அச்சம் தரும் தோற்றத்தவர். நீலநிற மேனியுடையவர். சிலம்பொலிக்கும் திருவடியுடையவர். பாம்புடன் கூடிய திரு அரை கொண்டவர்.தலைமாலைகள் புரளும் திருமார்பும் சர்ப்பப் பூணூலும் தரித்தவர். சூலம், மழு, பாசம், தீச்சுடர், கபாலம்,

உடுக்கு ஏந்திய திருக்கரங்களை உடையவர். அச்சந் தரும் மூன்று கண்களுடன் தோற்றமளிப்பவர். இரு கோரப்பற்களையும்,கோபக்கனல் கொந்தளிக்கும் முகத்தில் அச்சம் தரும் சிரிப்பையும் ஏற்றிருப்பவர். நாயை வாகனமாகக் கொண்டு காட்சி க் கொடுப்பவர். இராசதம், சாத்வீகம், தாமசம் ஆகிய மூன்று குணங்களுடனும் எழுந்தருளியவர். சங்காரருத்திர மூர்த்தி என்ற சிறப்புப் பெயரால் போற்றப்படுபவர். இவ்வாறு வைரவமூர்த்தியின் இலட்சணங்களை ஆகமங்களும் புராணங்களும் வரையறை செய்துள்ளன.

வைரவ மூர்த்தத்தின் இந்த இலட்சிணங்களின் அடிப்படையில் சகல தத்துவங்களையும் அக்கருத்து ஆன்மாக்களை ஈடேற்றும் தன்மை கொண்டதாகும். உலகப்பற்றை விடினும் உடற்பற்றை விடல் கடினமானதாகும். உடற்பற்றிருந்தால் உடைப்பற்றும் இருக்கும். அந்தப் பற்றையும் விடு என்பதே வைரவ மூர்த்த தத்துவமாகும். வினை விழும் போதுதான்; உடற் பற்று அழியும் அலைகளை அழிக்கும் கோலம் தன்னுடைய கோலமாகையால் தாமத குணத்தைக் காட்டும் கோர வடிவினராக காட்சி தருகின்றார்.

இவ்வாறான இந்த வைரவ மூர்த்தம் ஆகமம் சார்ந்த கிரியை முறையிலும், ஆகமம் சாராசடங்கு முறையிலும் வழிபடப்படுகின்றது.போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் சைவக் கோயில்களும் வழிபாடுகளும் அழித்தொழிக்கப்பட்ட காலத்தில் ஈழத்தின் வடக்கு,கிழக்கு, வடமேல் பகுதிகளில் வாழ்ந்த மக்களிடையே இவ்வழிபாடு சிறப்புற்றிருந்தது. இக்காலத்தில் வீடுகளிலும்,மரத்தடிகளிலும் சூலங்களை நட்டு மக்கள் வழிப்பட்டதாக வரலாறுகள் சான்று பகிர்கின்றன. இத்தகைய வழிபாட்டின் வளர்ச்சி நிலையாக இன்றும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் பல வைரவர் ஆலயங்கள் சிறப்புற்றுக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற வைரவர் ஆலயங்களுள் கொக்குவில் தலையாழி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் குறிப்பிடத்தக்கது. ஈழத்தின் தலை சிறந்த ஆலயமாகக் காணப்படும் இவ்வாலயத்தில் ஆறுமுகநாவலர் புராணபடனம் செய்து வழிபட்டதாகவும், யோகர் சுவாமிகள் தரிசித்து மகிழ்ந்த தலமாகவும் வரலாறுகள் தெரிவிக்கின்றன.யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஞான வைரவர் கோயில் பழமை சிறப்பும் புதுமைப் பொலிவும் கொண்ட கோயிலாகும். இந்த ஞான வைரவர் ஆலயம் பசு மையான மரங்கள் சூழக் கம்பீரமான இராஜ கோபுரத்துடன் கலையழகு மிக்க ஆலயமாகவும் இன்று திகழ்கின்றது. யாழ்ப்பாணம், காரைநகர், திண்ணக்களி வைரவர் ஆலமும், தினகரன் பிட்டி வைரவர் ஆலயமும் குறிப்பிடத்தக்க வைரவ ஆலயங்களாகும்.



**கொக்குவில் தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்**

திருகோண மலையில் பாலையூற்று, உவர்மலை, பெருந்தெரு, செ ங்கலடி ஆகிய இடங்களிலுள்ள ஞான வைரவர் ஆலயங்கள் சிறப்புப் பெற்றவை. கொழும்பு கொட்டாஞ்சே னை ஞானவைரவர் ஆலயம் இப்பிரதேச ஞான வைரவர் ஆலயங்கள் யாழ்ப்பாணப் பிரதேச ஆலயங்கள் போலல்லாமல் அலங்காரத் திருவிழாக்களைக் கொண்ட னவாகவே காணப்படுகின்றன இவ்வாறான ஆலயங்களில் நித்திய பூசைகள், விஷேடபூசைகள் என்பன நடைபெறுகின்றன. அர்த்தசாமப்பூசையின் போது ஆலயத்தின் திறப்புக்கள் வைரவர் முன் வைக்கப்பட்டு நைவேத்தியம் வைத்து பூசை செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். சில ஆலயங்களில் இவரைக் குறிக்க சூலம் மட்டும் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும்.



கொக்குவில் கோணாவலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

வைரவருக்குரிய விர நாட்கள் சித்திரைப் பரணி, ஐப்பசிப்பரணி தைமாதத்தில் வரும் முதல் செவ்வாய்க்கிழமை என்பனவாகும். இருநாட்களில் விரதமிருந்து சிவப்புப்பட்டு, சிவப்புமாலை, வடை மாலையால் மக்கள் வழிபட்டு வைரவரின் அருளைப் பெறுவர்.

இவ்வாறு ஆகமம் சார்ந்த கோயில்கள் வழிபாட்டு முறைகள் இருக்கும் போது ஆகமம் சாராத கோயில்களும் வழிபாட்டு முறைகளும் இவருக்குண்டு. இவ்வகையில் ஆகமம் சாரா வைரவர் ஆலயங்களில் யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர் சுவாமி கோயில் சிறப்புக்குரியதாகும். ஏறக்குறைய 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயமாகும். இந்த ஆலயம் தவிர உரும்பிராய் காட்டு வைரவர் கோயில், சங்கானை நிகரை வைரவர் கோயில் இணையிலி வைரவர் கோயில், வன்னியில் துணுக்காய் அணிஞ்சியற் குளம் நரசிம்ம வைரவர் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கன. ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் நடைபெறும் பொங்கலன்று பண்டம் எடுத்தல், மடை பரவுதல், துறிபிடித்தல், பரிகலம் அழைத்தல், பலியிடுதல், கலை ஆடுதல், கட்டுச் சொல்லுதல் போன்ற சடங்குகள் பூசாரியொருவரால் மேற்கொள்ளப்படும்.



öPõÊ®¦ öPõmhõg÷\øÚ
bõÚøÁµÁº B»¯®

மட்டக்களப்புப் பிரதேசங்களில் அமைந்த வைரவர் கோயில்களில் மட்டக்களப்பு ஸ்ரீ நரசிங்க வைரவர் பெரும் சிறப்புப் பெறுகிறது. விஷ்ணுவின்

நரசிங்க அவதாரமும் சிவகுமாரரான வைரவ மூர்த்தமும் ஒன்றாக அமைந்த பெயர் கொண்டு விளங்கும் இவ்வாலயம் விஷ்ணு ஆலய அமைப்பினை ஒத்த சிற்பங்களை உடையதாக உள்ளது.

மட்டக்களப்பில் அருள்நேசபுரம், தாண்டவன்வெளி, பட்டிருப்பு, பட்டிப்பளை, பாலமீன்மடு, மட்டக்களப்பு, விவேகானந்தபுரம், கிரான் , கிரான்குளம், கூளாவடி போன்ற இடங்களில் பிரசித்தி பெற்ற ஆகமம் சாரா வைரவர் ஆலயங்கள் காணப்படுகின்றன. இவ்விடயங்கள் வீட்டு வாசலில் நிரந்தரமாகவே வைரவர் பந்தல்கள் அமைக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியதாகும். அவ்வாலயங்களில் அனைத்திலும் கதவுதிறத்தல், மடைபரவுதல், காவியம் பாடல், நூல் கட்டுதல், திருநீறு போடுதல், தண்ணீர் ஓதிக்கொடுத்தல், கதவு அடைத்தல் போன்ற சடங்குகள் பூசாரிமாரால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் வயல் வெளியில் கதிர் கண்ட சடங்கு என்பனவும் இடம் பெறுகின்றன. இப்பிரதேச வழிபாட்டில் ரொட்டி, கரும்பு, பழவகைகள், மது என்பவற்றுடன் பலியிடல் போன்றனவும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.



ஈழத்துச் சைவர்கள் யாவரும் எவ்வித பாகுபாடுமின்றி தம் விருப்பம் போல் வைரவ விக்கிரங்களை ஆகமம் சார்ந்த முறையிலும் ஆகமம் சாரா முறையிலும் அமைத்து வழிபடுகின்றனர். இதனால் இறைவனுடன் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவும், இறைவன் அந்தப் பக்தன் மீது கருணை கொண்டு அவன் பால் அருள் புரியவும் இவ் வைரவத் தலங்களை வழிபடுகின்றனர். ஆதலால் இந்த வைரவத் தலங்கள் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிகின்றன என்று கூறலாம்.



**உரும்பிராய் காட்டு வைரவர் கோயில்**

## பயிற்சிகள்

1. சடங்குகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
2. கிராமியப் பெண் தெய்வங்கள் நான்கைக் குறிப்பிடுக.
3. பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயச் சடங்குகள் சிலவற்றைப் பெயரிடுக.
4. வைரவர் மூர்த்தத்தின் வகைகள் யாவை?
5. வைரவ மூர்த்தத்தின் இலட்சிணங்கள் ஐந்தைப் பெயரிடுக
6. வைரவ மூர்த்தத்தின் தத்துவம் யாது?
7. ஆகமம் சாரா வைரவர் ஆலயங்களில் இடம்பெறும் சடங்குகள் நான்கைத் தருக.

## செயற்பாடுகள்

★ உமது பிரதேசத்தில் அல்லது அயற் பிரதேசத்தில் நாட்டார் பெண் ஆலயம் ஒன்றிற்குச் சென்று, அங்கு நடைபெறும் சடங்குகளைப் பார்வையிட்டு, அவற்றை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

★ உமது பிரதேசத்திலோ அல்லது அயற்பிரதேசத்திலோ உள்ள ஆகமம் சார்ந்த வைரவர் ஆலயத்திற்கு சென்று, வழிபட்டப்பின் அவை பற்றிய அட்டவணை ஒன்றைத் தயாரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

**திரௌபதியம்மன் சடங்கு**

★ சடங்கை அடிப்படையாகக் கொண்டது நாட்டார் தெய்வவழிபாடாகும்.
★ நாட்டார் தெய்வ வழிபாட்டில் சமயச் சடங்குகள் முக்கியமானவையாகும்.
★ நாட்டார் பெண் தெய்வங்களுள் திரௌபதியும் ஒருவர்.
★ ஈழத்தில் மட்டக்களப்பிலும், புத்தளம் உடப்பிலும் திரௌபதிக்கான ஆலயங்கள் உண்டு.
★ திரௌபதி அம்மன் சடங்கு ஏனைய சடங்குகளிலிருந்து வேறுபட்டது.
★ மகாபாரதக் கதை 18 நாட்கள் கொண்ட சடங்குகளைக் கொண்டது.
★ பலவிதமான சடங்கு இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.
★ தெய்மாடுதல் அதன் மூலம் கட்டுச் சொல்லுதல், காப்பு கட்டுதல் என்பன ஆவணி மாதத்தில் இடம் பெறுகின்றன

**வைரவர் வழிபாடு**

★ சிவ மூர்த்தங்களுள் வைரவர் மூர்த்தமும் ஒன்று.
★ ஆகமம் சார்ந்த முறையிலும் ஆகமம் சாரா முறையிலும் வழிபடுவர்.
★ உலகப்பற்று, உடற்பற்று, உடைப்பற்று நீக்க வேண்டும் என்பதே வைரவ மூர்த்தத்தின் தத்துவமாகும். மூன்று குணங்களையும் கொண்ட மூர்த்தமாகும்.
★ சித்திரைப்பரணி, ஐப்பசிப் பரணி வைரவ மூர்த்தத்தின் பிரதான விரதகாலங்களாகும்.